RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023- 2025




மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

www.malaithanthi.in

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 163 | ஜூன்.20 2026 சனிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

# மேகேதாட்டு விவகாரம்: தமிழக அரசின் தனித் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றம்

சென்னை: ஜூன்.20-

மேகேதாட்டு விவகாரத்தில் கர்நாடகா அரசை கண்டித்து தமிழக அரசு கொண்டுவந்த தனித் தீர்மானம் சட்டப்பேரவையில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

தமிழக சட்டப்பேரவையின் இரண்டாம் நாள் கூட்டத்தொடர் இன்று காலை 9.30 மணிக்கு தொடங்கியது. முதலில் மறைந்த மூத்த தலைவர்கள், திரைப் பிரபலங்கள், முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர்கள் உள்ளிட்டோருக்கு இரங்கல் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, தமிழக முதல்வர் விஜய் மேகேதாட்டு விவகாரத்தில் கர்நாடகா நடவடிக்கையை எதிர்த்து அரசின் தனித் தீர்மானத்தை முன்மொழிந்தார்.

தொடர்ந்து பேசிய முதல்வர் விஜய், "காவிரி நடுவர் மன்றம் 522007 அன்று அளித்த இறுதித் தீர்ப்பையும், உச்ச நீதிமன்றம் 1622018 அன்று அளித்த தீர்ப்பையும் மதிக்காமலும், சம்பந்தப்பட்ட படுகை மாநிலங்களின் இசைவைப் பெறாமலும், மத்திய அரசின் எந்தவித அனுமதியைப் பெறாமலும், கர்நாடக அரசு தன்னிச்சையாக காவிரி நதியின் குறுக்கே மேகேதாட்டுவில் அணை கட்ட முயற்சி மேற்கொள்வதை எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது.

அதனால், கர்நாடக அரசின் இச்செயலுக்கு தனது கடும் எதிர்ப்பை இப்பேரவை தெரிவித்துக் கொள்கிறது. கர்நாடக அரசின் மேகேதாட்டு அணைத் திட்டத்திற்கு தொழில்நுட்பம், சுற்றுச்சூழல் உள்பட எவ்வித அனுமதியும் அளிக்கக்கூடாது என மத்திய அரசை இப்பேரவை வலியுறுத்துகிறது.

காவிரி நடுவர் மன்றமும், உச்ச நீதிமன்றம், காவிரிப்படுகை ஒரு பற்றாக்குறை படுகை எனக் குறிப்பிட்டுள்ளது, படுகையின் மொத்த நீரினையும், படுகை மாநிலங்களுக்கு பகிர்ந்தளித்துவிட்டால், காவிரிப் படுகையில் புதிய திட்டங்களை மேற்கொள்ளவோ, கூடுதலாக நீரை பயன்படுத்தவோ இயலாது.

காவிரிப் பிரச்சினை தமிழகம் மற்றும் கர்நாடக மாநிலங்களின் உணர்வுப்பூர்வமான பிரச்சினையாகும்.

ஆதலால், கர்நாடக அரசு மேகேதாட்டுவிலோ அல்லது காவிரிப் படுகையில் வேறு எந்த இடத்திலோ அணை அல்லது எவ்வித புதிய நீர்த்தேக்க திட்டத்தையோ, பிற படுகை மாநிலங்களின் இசைவு இன்றியும், மத்திய அரசின் ஒப்புதல் இல்லாமலும் மேற்கொள்ளக்கூடாது என கர்நாடக அரசுக்கு அறிவுறுத்துமாறு மத்திய அரசை இப்பேரவை வலியுறுத்துகிறது.

கர்நாடக அரசின் விரிவான திட்ட அறிக்கையை பரிசீலிக்கவோ, அதன்மீது நடவடிக்கை மேற்கொள்ளவோ அல்லது அதற்கு அனுமதி வழங்கவோ கூடாது என்று மத்திய நீர்வள குழுமத்தையும் இப்பேரவை வலியுறுத்துகிறது.

கர்நாடக அரசின் இந்த முயற்சியை முறியடித்து, தமிழக விவசாயிகள் நலனைப் பாதுகாத்திட தமிழ்நாடு அரசு எடுக்கும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் இப்பேரவை தனது ஆதரவை ஒருமனதாக தெரிவித்துக்கொள்கிறது" என்று முதல்வர் பேசினார்.

தொடர்ந்து முதல்வரின் தீர்மானத்தின் மீது அரசியல் கட்சித் தலைவர்கள் உரையாற்றினர். தீர்மானத்தின் மீது முதல் நபராக உரையாற்றிய காங்கிரஸ்



அமைச்சர் ராஜேஷ்குமார், தீர்மானத்தை ஆதரித்தார்.

முதலாவதாக ஆதரித்த காங்கிரஸ்...

அமைச்சர் ராஜேஷ் குமார் பேசுகையில், "முதல்வர் ஜோசப் விஜய் முன்மொழிந்துள்ள தீர்மானத்தை காங்கிரஸ் ஆதரிக்கிறது. காவிரி என்பது ஒரு நதி மட்டுமல்ல, தமிழக விவசாயிகளின் உயிர்நாடி. அதனை நம்பி லட்சக்கணக்கான விவசாயிகளின் வாழ்க்கை உள்ளது.

காவிரி நடுவர் மன்றம், உச்ச நீதிமன்றம் தீர்ப்பை மதிக்காமல், தமிழக அரசின் ஒப்புதல் பெறாமல் காவிரி நடுவே அணை கட்ட முயற்சிக்கும் கர்நாடக அரசுக்கு கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

இது சட்டத்துக்கு எதிரானது மட்டுமல்ல, தமிழக மக்களின் உரிமையை பறிக்கும் செயலாகும்.

காவிரி நீர் வழங்குவது குறித்து நடுவர் மன்றம், உச்ச நீதிமன்றம் தீர்ப்பின்படி, ஆண்டுதோறும் 177.25 டிஎம்சி தண்ணீரை மூன்று வழித்தடங்களில் கர்நாடக அரசு வழங்க வேண்டும்.

தமிழகத்துக்கு வரும் நீரைத் தடுத்து மேகேதாட்டு அணை கட்டுவது உச்ச நீதிமன்ற தீர்ப்புக்கு எதிரானதாகும். இத்திட்டம் செயல்படுத்தப்பட்டால் காவிரி டெல்டா விவசாயிகளின் எதிர்காலம் கேள்விக்குறியாகும். தமிழகத்தின் பல பகுதிகளும் பாதிக்கும். கர்நாடக அரசின் ஒருதலைபட்மான நடவடிக்கையை காங்கிரஸ் கண்டிக்கிறது," என்று பேசினார்.

பிரேமலதாவின் யோசனை:

"தமிழகத்துக்கு மிக முக்கியமான இந்த தீர்மானத்தை யாரும் எதிர்க்கப் போவதில்லை. அனைவரும் ஒன்றாகத்தான் இருப்போம். அந்தவகையில், தேமுதிகவும் இந்த தீர்மானத்தை ஆதரிக்கிறது.

ஆனால், சுதந்திரம் வாங்கிய காலத்தில் இருந்து மீனவர்கள் பிரச்சினை, காவிரி நதி நீர்ப் பிரச்சினைகள் குறித்து தொடர்ந்து பேசிக் கொண்டுதான் இருக்கிறோம்.

தமிழக மக்களின் உரிமையை நாம் ஒவ்வொரு முறையும் சுற்றியுள்ள மாநிலங்களை கேட்டுக்கொண்டேதான் இருக்கிறோம். அப்படியல்லாது, தன்னிறைவு பெற்ற மாநிலமாக தமிழ்நாடு மாற வேண்டும்.

முதல்வராக இருந்த ஜெயலலிதா, கருணாநிதி, மு.க. ஸ்டாலின் என அனைவரும் காவிரி நதி நீர் விவகாரத்தில் தமிழகத்தின் உரிமையை நிலைநாட்ட பல போராட்டங்களை நடத்தியுள்ளனர்.

தாய்ப்பால் போல் தண்ணீர் முக்கியமானது. நீரின்றி அமையாது உலகு. எனவே, மின்மிகை மாநிலமாக தமிழகத்தை உருவாக்கியதை போல், நீர் மேலாண்மையை நாம் உருவாக்க வேண்டும். இனிவரும் மழைக்காலத்துக்கு முன்னதாக நீர் மேலாண்மையைப் பற்றி யோசிக்க வேண்டும்.

தமிழகத்தில் எங்கெல்லாம் நதிகளை இணைக்க முடியுமோ, அதைச் செய்ய வேண்டும். அனைத்துப் பகுதிகளையும் தூர்வார வேண்டும். மழை நீர் வீணாக கடலில் கலப்பதை தடுக்க வேண்டும்." எனத் தெரிவித்தார்.

உதயநிதி வைத்த கோரிக்கை:

தமிழக சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் பேசுகையில், "தமிழக விவசாயிகளின் வாழ்வாதாரத்தை அழிக்கும் முயற்சி மேகேதாட்டு அணை. அணை கட்டுவதற்கு திமுக எதிர்ப்பு தெரிவிக்கிறது. காவிரியின் குறுக்கே அணை கட்டுவதற்கு உச்ச நீதிமன்றத்தை நாடி தடை பெற்றுக் கொடுக்க முக்கிய காரணமாக இருந்தவர் கருணாநிதி.

கர்நாடகத்தில் அப்போது எங்கள் கூட்டணியில் இருந்த கட்சி ஆட்சியில் இருந்தாலும் அப்போதைய முதல்வர் ஸ்டாலின் அதை கடுமையாக எதிர்த்தார். தற்போது கொண்டுவரப்பட்டுள்ள தீர்மானத்தை திமுக ஆதரிக்கிறது.

2021ல் ஆட்சிக்கு வந்தவுடன் பிரதமருக்கு அப்போதைய முதல்வர் ஸ்டாலின் கடிதம் எழுதினார். தொடர்ந்து அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அதேபோல் மேகேதாட்டு அணை கட்ட கர்நாடகம் நிதி ஒதுக்கியவுடன் கண்டனம் தெரிவித்து பேரவையில் தீர்மானம் நிறைவேற்றினோம். காவிரியில் தமிழ்நாட்டின் உரிமையை அனைவரும் சேர்ந்து நிலைநாட்ட வேண்டும்.

மேகேதாட்டு அணை விவகாரத்தில் தமிழக அரசின் அனைத்து முயற்சிக்கும் திமுக உடன் நிற்கும்.

தனித் தீர்மானத்தில், மேகேதாட்டு பிரச்சினைகளுக்காக தனி நடுவர் மன்றம் அமைக்க வலியுறுத்த வேண்டும் என்ற கோரிக்கையையும் சேர்க்க வேண்டும். இந்த தீர்மானத்தை கடிதம் மூலம் மத்திய அரசுக்கு அனுப்பி வைப்பதைவிட, அனைத்து கட்சிகளின் எம்எல்ஏக்கள், எம்பிக்கள் ஒன்றிணைந்து நேரடியாக சென்று மத்திய அரசிடம் வழங்க வேண்டும்" என வலியுறுத்தினார்.

மேகேதாட்டு விவகாரத்தில் தமிழக அரசு கொண்டுவந்த தனித் தீர்மானத்தில் காங்கிரஸ், விசிக, இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், கொமதேக, மதிமுக, தேமுதிக, பாமக, அதிமுக, திமுக உள்பட அனைத்துக் கட்சிகளும் ஒருமனதாக ஆதரித்தன. அதேவேளையில் அமமுக, பாஜக மட்டும் ஐயூஎம்எல் உறுப்பினர்கள் தீர்மானத்தின் மீது கருத்து தெரிவிக்காமல் மவுனம் காத்தனர்.

இதனையடுத்து, மேகேதாட்டு விவகாரத்தில் தமிழக அரசு கொண்டுவந்த தனித் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டதாக சபாநாயகர் அறிவித்தார்.

உதயநிதி கோரிக்கையை ஏற்ற முதல்வர் விஜய்:

தொடர்ந்து பேசிய முதல்வர் விஜய், "தமிழக அரசு கொண்டுவந்த தனித் தீர்மானத்தை ஆதரித்த பேரவை உறுப்பினர்களுக்கு நன்றி.

மேகேதாட்டு பிரச்சினைக்காக எனது தலைமையில் 26.05.2026 அன்று பிரத்யேகமாக தனி நடுவர் மன்றம் அமைப்பது குறித்து சட்ட வல்லுநர்களுடன் கலந்தாலோசித்து தனி நடுவர் மன்றம் அமைக்க தேவையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

எனவே எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் முன்வைத்த கருத்தை தீர்மானத்தின் 4வது பத்திக்கு அடுத்து கூடுதலாக சேர்க்கலாம்," என்று கேட்டுக் கொண்டார். இதன்பின் திருத்தப்பட்ட தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

## தனியார் கல்வி நிறுவனங்களில் சாதி விவரம் கேட்க தடை கோரி வழக்கு: அரசு பதிலளிக்க ஐகோர்ட் உத்தரவு

மதுரை: ஜூன்.20-

தனியார் கல்வி நிறுவன விண்ணப்ப படிவங்களில் சாதி, சமூக விவரங்கள் கேட்க தடை கோரிய வழக்கில் தமிழக பள்ளிக்கல்வி மற்றும் உயர்கல்வித்துறை முதன்மைச் செயலர்கள் பதிலளிக்க உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.



விருதுநகர் மாவட்டத்தைச் சேர்ந்த விக்ரமன் உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனு: தனியார் கல்வி நிறுவனங்கள் மாணவர்களிடம் சாதி கேட்ககூடாது என உள்ளது. இதை மீறி கல்வி நிறுவனங்களில் மாணவர் சேர்க்கையின் போது விண்ணப்பதாரர்களின் சாதி மற்றும் சமூக விவரங்களை கட்டாயமாகக் கேட்பது மாணவர்கள் தேர்வு மற்றும் சேர்க்கை செயல்முறைகளில் பாகுபாடு ஏற்பட வழிவகை செய்யும்.

எனவே தமிழகத்தில் உள்ள தனியார் கல்வி நிறுவனங்களும் விண்ணப்பப் படிவங்களில் சாதி அல்லது சமூக விவரங்களை கட்டாயமாக சேகரிக்க தடை விதிப்பதோடு, தனியார் நிறுவனங்களில் பாகுபாடு இல்லாத சூழலை உறுதி செய்ய உரிய ஒழுங்கு முறைகளை வகுக்கவும் உத்தரவிட வேண்டும். இவ்வாறு மனுவில் கூறியிருந்தார்.

இந்த வழக்கு நீதிபதிகள் சதீஷ்குமார் ஜோதிராமன் அமர்வில் இன்று விசாரணைக்கு வந்தது. பின்னர் நீதிபதிகள், கல்வி நிறுவனங்களில் விண்ணப்பங்களில் சாதிய விவரங்களை கேட்பதை கட்டாயமாக்கக்கூடாது என்பது தொடர்பாக கல்வி நிறுவனங்களுக்கு சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளதா? எனக் கேட்டு, மனு தொடர்பாக தமிழ்நாடு பள்ளிக்கல்வி மற்றும் உயர்கல்வித்துறை முதன்மைச் செயலர்கள் பதிலளிக்க உத்தரவிட்டு விசாரணையை ஒத்திவைத்தனர்.

**present sale for all over Tamil Nadu**

**தற்பொழுது தமிழகமெங்கும் விற்பனையாகி வருகிறது**

## "மேகேதாட்டு அணையை தடுக்கும் தமிழக அரசின் முயற்சிகளுக்கு திமுக துணை நிற்கும்" : உதயநிதி உறுதி

சென்னை: ஜூன்.20-

"மேகேதாட்டுவில் அணை கட்டப்படக் கூடாது என்பதே திமுகவின் உறுதியான நிலைப்பாடு. காவிரி விவகாரத்தில் முன்னாள் முதல்வர் கருணாநிதி பல்வேறு சட்டப் போராட்டங்களை நடத்தியுள்ளார். மேகேதாட்டு அணைக்கு எதிராக முதல்வர் கொண்டுவந்த தீர்மானத்துக்கு திமுக ஆதரவு அளிக்கிறது," என தமிழக எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.



தமிழக சட்டப்பேரவை கூட்டத்தொடரின் 2வது நாளான இன்று மேகேதாட்டு விவகாரத்தில் கர்நாடகா நடவடிக்கையை எதிர்த்து முதல்வர் விஜய் தனித் தீர்மானத்தை முன்மொழிந்தார். இது குறித்து உதயநிதி ஸ்டாலின் சட்டப்பேரவையில் கூறும்போது, "மேகேதாட்டுவில் அணை கட்டப்படக்கூடாது என்பதுதான் திமுகவின் உறுதியான நிலைப்பாடு.

காவிரி விவகாரத்தில் முன்னாள் முதல்வர் கருணாநிதி பல்வேறு சட்டப் போராட்டங்களை நடத்தியுள்ளார். இதை இந்த அவையில் இருக்கக்கூடிய மூத்த உறுப்பினர்கள் அனைவரும் அறிவார்கள். ஒரு நீண்ட நெடிய சட்ட, அரசியல் போராட்டங்களை நடத்தி தான் நாம் காவிரி மீதான உரிமையை பெற்றெடுத்தோம். ஆனால் அதைப் பறிக்கும் வகையில் கர்நாடக அரசு, மேகேதாட்டுவில் அணை கட்டும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறது.

எங்களுடைய கூட்டணியில் இருந்த கட்சி, கர்நாடகவில் ஆட்சியில் இருந்தாலும் மேகேதாட்டு அணை கட்டும் திட்டத்துக்கு, முன்னாள் முதல்வர் ஸ்டாலின் கடுமையாக எதிர்ப்பு தெரிவித்தார். அணை திட்டத்திற்காக ரூ.1000 கோடி கர்நாடக அரசு ஒதுக்கியதைக் கண்டித்து, இதே அவையில் தீர்மானம் நிறைவேற்றியது திமுக அரசு.

2021ஆம் ஆண்டு நாங்கள் ஆட்சிக்கு வந்த அடுத்த மாதமே, மேகேதாட்டு அணை கட்ட அனுமதிக்கக் கூடாது என பிரதமருக்கு முதல்வராக இருந்த மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதினார். பிறகு அதே கருத்தை வலியுறுத்தி, அதற்கு அடுத்த மாதமே ஜல்சக்தி துறை அமைச்சருக்கும் கடிதம் எழுதினார்.

அனைத்து சட்டமன்றக் கட்சித் தலைவர்களைக் கூட்டி, மேகேதாட்டு அணையை கட்ட அனுமதிக்கக்கூடாது என தீர்மானம் நிறைவேற்றினோம். அத்தீர்மானத்தை ஒன்றிய அமைச்சரிடம் நேரில் சென்றும் வலியுறுத்தியிருக்கிறோம்.

2022-2023 நிதியாண்டில் மேகேதாட்டு அணைக்கு கர்நாடக அரசு ஒதுக்கிய நிதியைக் கண்டித்து, சட்டப்பேரவையில் அரசினர் தனித்தீர்மானம் நிறைவேற்றினோம். தமிழ்நாட்டின் உரிமைகளை காக்க நாம் அனைவரும் ஒன்றுபட்டு நிற்போம்' என்று முன்னாள் முதல்வர் மு.க.ஸ்டாலின். செயல்பட்டார்.

இப்படி, திமுக தமிழ்நாட்டின் தொடர் எதிர்ப்பை பதிவு செய்ததன் காரணமாகதான் இதுவரை மேகேதாட்டு அணை கட்டப்படவில்லை. மேகேதாட்டு அணை கட்டும் கர்நாடகாவின் முயற்சிக்கு எதிராக முதல்வர் கொண்டுவந்துள்ள தீர்மானத்தை திமுக சார்பில் மனதார வரவேற்கிறோம்.

கர்நாடகா, மேகேதாட்டு அணை கட்டுவதை தடுக்க சட்டரீதியாகவும், பிரதமர் மூலமாகவும் இந்த அரசு எடுக்கின்ற அனைத்து முயற்சிகளுக்கும் திமுக நிச்சயம் துணை நிற்கும்.

மேகேதாட்டு அணை கட்ட முயற்சிக்கும் கர்நாடக அரசை நாம் அனைவரும் சேர்ந்து ஒற்றுமையாக இருந்து தடுத்து நிறுத்துவோம். இந்த ஆண்டு ஜூன் 12ம் தேதி மேட்டூர் அணை திறக்காததால், டெல்டா விவசாயிகள் சிரமத்தில் இருக்கிறார்கள். குறுவை சாகுபடி பாதிக்கப்பட்டுள்ளது. அடுத்த காவிரி ஆணைய கூட்டத்தில் தமிழ்நாடு அரசு உறுதியாகப் பேசி, நமக்கான நீர் பங்கீட்டை பெற வேண்டும்.

இந்தத் தீர்மானத்தை கடிதம் மூலமாக ஒன்றிய அரசுக்கு அனுப்பி வைப்பதற்கு பதிலாக, தமிழகத்தின் அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் இணைந்து ஒரு குழுவாக சென்று ஒன்றிய அரசிடம் இதை கொடுத்து நமது ஒற்றுமையை வெளிப்படுத்த வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன். அதற்கு திமுக தயாராக இருக்கிறது; அரசியல் வேறுபாடுகளை எல்லாம் கடந்து இந்த அரசும் முன் வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## வாணியம்பாடி அருகே மதுபோதையில் தாய் தங்கையை தவறாக பேசிய நண்பனை பீர்பாட்டிலால் குத்தி கொலை செய்த இளைஞர்

வாணியம்பாடி, ஜூன்.20-

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி நகராட்சிக்குட்பட்ட ஜீவா நகர் பகுதியை சேர்ந்த இஸ்தியாக் (எ) முன்னா (24) என்பவர், வாணியம்பாடியில் உள்ள டீக்கடையில் வேலை செய்து வரும் நிலையில், முன்னா நேற்று, ஆண்டியப்பனூர் பகுதியில் உள்ள டீக்கடையில் வேலை செய்யும் தனது நண்பர்களான, தாஜுதீன், மற்றும் அமர்சிங், ஆகியோருடன், ஆண்டியப்பனூர் அணைக்கு சென்று விட்டு, மீண்டும் வாணியம்பாடிக்கு திரும்பும் போது, மேல்நிம்மியம்பட்டு பகுதியில் உள்ள புளியந்தோப்பில், அமர்ந்து மூவரும் ஒன்றாக மது அருந்துக்கொண்டிருந்துள்ளனர், அப்போது முன்னா மதுபோதையில் தாஜுதின் தாய் மற்றும் தங்கை, அவதூறாக பேசியுள்ளார் இதனால் ஆத்திரமடைந்த தாஜுதின்



அப்படி பேச வேண்டாம் என கூறியுள்ளார், ஆனால் முன்னா அப்படி தான் பேசுவேன் என கூறியதால், ஆத்திரமடைந்த தாஜுதின் பீர் பாட்டிலை உடைத்து, முன்னாவின் வயிறு மற்றும் கழுத்தில் குத்தி, கழுத்தை அறுத்து கொலை செய்துவிட்டு, தாஜுதின், மற்றும் அமர்சிங், வாணியம்பாடி சென்னாம்பேட்டை பகுதியில் உள்ள தாஜுதின் மாமாவான சபீர் வீட்டிற்கு சென்று, நடந்ததை கூறியுள்ளனர், அதனை தொடர்ந்து, சபீர் இக்கொலைச்சம்பவம் குறித்து, வாணியம்பாடி நகர காவல்துறையினரிடம் தெரிவித்த நிலையில், உடனடியாக தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்த வாணியம்பாடி துணை காவல் கண்காணிப்பாளர் மகாலட்சுமி தலைமையிலான காவல்துறையினர், புளியந்தோப்பில் சடலமாக இருந்த முன்னாவின் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக வேலூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர், அதனை தொடர்ந்து சம்பவம் நடைபெற்ற இடம் ஆலங்காயம் காவல் நிலையத்திற்குட்பட்டதால், முன்னாவை குத்தி கொலை செய்த, தாஜுதீன் மற்றும் அமர்சிங்கை ஆலங்காயம் காவல்துறையினர் கைது செய்து, அவர்களிடம் மேலும் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். மேலும் மதுபோதையில் தாய் மற்றும் தங்கையை தவறாக பேசிய நண்பனை, பீர்பாட்டில் குத்தி கொலை செய்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



■ திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில், அனைத்து கிராம ஊராட்சிகளில் தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) பகுதி மிமி திட்டத்தினை செயல்படுத்துதல் மற்றும் நிர்வகித்தல் குறித்து நகராட்சி, பேரூராட்சி, மாசு கட்டுப்பாட்டு வாரியம் உள்ளிட்ட பல்வேறு துறை அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சியர் கு.ரவிகுமார்,இ.ஆ.ப., தலைமையில் (18.06.2026) அன்று நடைபெற்றது. உடன் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் டாக்டர்.உமாமகேஸ்வரி, மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் என்.கே.ஆர்.சூரியகுமார், மகளிர் திட்டம், திட்ட இயக்குநர் விஜயகுமாரி, முதன்மைக் கல்வி அலுவலர் இரா.புண்ணியகோட்டி, உதவி இயக்குநர் ஊராட்சிகள் மகாதேவன், முருகன், ஊரக வளர்ச்சித்துறை செயற்பொறியாளர் சங்கீதா, உதவி திட்ட அலுவலர் (உட்கட்டமைப்பு) சிவகுமார் மற்றும் சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் உள்ளனர்.



■ திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், பள்ளிக்கல்வித்துறையின் சார்பில், 12ஆம் வகுப்பு முடித்த அனைத்து மாணவர்களையும் 100% உயர்கல்வியில் சேர்ப்பதை நோக்கமாகக் கொண்டு, உயர்கல்வியில் சேருவதில் மாணவர்களுக்கு உள்ள குறைகளைக் களையும் நோக்கில் "மாணவர் குறைத்தீர்வு நாள் கூட்டம்" மாவட்ட ஆட்சியர் கு.ரவிகுமார்,இ.ஆ.ப., தலைமையில் (18.06.2026) அன்று நடைபெற்றது. உடன் முதன்மைக் கல்வி அலுவலர் இரா.புண்ணியகோட்டி, மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் விஜயகுமார், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் கண்ணன், உயர்கல்விச் சேர்க்கைக்கான கல்லூரிப் பொறுப்பாளர்கள், மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள், ஆசிரியர் பயிற்றுநர்கள் ஆகியோர் உள்ளனர்

## கிருஷ்ணகிரி வட்டார போக்குவரத்து அலுவகத்தில் ரெய்டுகணக்கில் வராத, ரூ.1.08 லட்சம் பறிமுதல்: புரோக்கர்கள் ஓட்டம்

கிருஷ்ணகிரி, ஜூன் .20-

கிருஷ்ணகிரி வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் நேற்று லஞ்ச ஒழிப்பு போலீசார் நடத்திய சோதனையில் கணக்கில் வராத, 1.08 லட்சம் ரூபாய் பறிமுதல் செய்யப்பட்டது.தமிழகம் முழுவதும், பல்வேறு இடங்களில் நேற்று இடைத்தரகர்கள், டிரைவிங் பயிற்சி பள்ளிகள் மூலம் வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு லஞ்சம் பெறப்படுவதாக வந்த புகாரின் அடிப்படையில் லஞ்ச ஒழிப்புத்துறையினர் சோதனை நடத்தினர்.. அதன்படி கிருஷ்ணகிரி மாவட்ட லஞ்ச ஒழிப்பு போலீசார் இன்ஸ்பெக்டர் ரவி தலைமையில், எஸ்.ஐ., விஜயகுமார் மற்றும் போலீசார் மஞ்சுநாதன், மணிகண்டன், ஸ்ரீதர்,



ரவி ஆகியோர் கொண்ட குழுவினர், கிருஷ்ணகிரி வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் சோதனை நடத்தினர். நேற்று முன் தினம் மதியம், 12:00 மணிக்கு அலுவலகத்திற்குள் நுழைந்த லஞ்ச ஒழிப்பு போலீசார், நுழைவு வாயிலை பூட்டி சோதனையை துவங்கினர். ரெய்டு நடப்பதை அறிந்த புரோக்கர்கள் வட்டார போக்குவரத்து அலுவலகம் அருகிலிருந்து சிட்டாய் பறந்தனர். அவர்களில் சிலரை போலீசார் பிடித்தனர். தொடர்ந்து நடந்த சோதனை, அன்றிரவு 7:30 மணிக்கு நிறைவடைந்தது. இதில், கணக்கில் வராத, கட்டணத்தை தவிர பேப்பர்களுக்குள் இருந்த தொகைகள் என்ற அடிப்படையில், 1.08 லட்சம் ரூபாயை லஞ்ச ஒழிப்பு போலீசார் பறிமுதல் செய்தனர்.கிருஷ்ணகிரி வட்டார போக்குவரத்து அலுவலர் ஈஸ்வரமூர்த்தி, மோட்டார் வாகன ஆய்வாளர் செந்தில்குமார், புரோக்கர்கள் ஜார்ஜ், கார்த்திக், பிரகாஷ், பழனி, சுரேஷ், கபார் ஆகியோரிடம் லஞ்ச ஒழிப்பு போலீசார் விசாரணை நடத்தினர். இவர்கள் 8 பேர் மீதும் ஊழல் தடுப்பு சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட இருப்பதாக லஞ்ச ஒழிப்பு போலீசார் தெரிவித்தனர்.

## வெலிங்டன் கண்டோன்மெண்ட் சார்பில் பள்ளிகளுக்கு இடையிலான தூய்மைக்கான போட்டி

நீலகிரி வெலிங்டன், ஜூன்.20-

மத்திய அரசின் தூய்மை பாரத திட்டத்தின் கீழ் நாடு முழுவதும் பல்வேறு தூய்மை பணிகள் மேற்கொள்ளபட்டு வருகிறது.இதன் ஒரு பகுதியாக மத்திய பாதுகாப்பு துறையின் கீழ் உள்ள வெலிங்டன் கன்டோன்மெண்ட் வாரியம் சார்பில் Swachhata hi seva எனப்படும் தூய்மையே சேவை இயக்கம் சார்பில் பள்ளிகளுக்கிடையேயான,தூய்மை போட்டிகள் நடைபெற்றது. தூய்மை சேவையை ஊக்குவித்து சுற்றுச்சூழல் நிலைத்தன்மை குறித்து மாணவர்களிடையே,விழிப்புணர்வு ஏற்படுத்தவும் இப்போட்டி நடத்தப்பட்டது. இதில் கலந்துகொண்ட மாணவர்கள் பள்ளி வளாகத்தை சுத்தமாக வைத்தல், உங்களுடைய தூய்மை





குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துதல், நகர் பகுதிகளை தூய்மைப் படுத்துதல்,குப்பைகளை தரம் பிரித்தல், பிளாஸ்டிக் பயன்பாட்டை பள்ளி வளாகத்தில் தடை விதித்தல், ஒருமுறை பயன்படுத்த கூடிய பேனாக்களை தவிர்த்தல், விழிப்புணர்வு பேரணி, கழிவுகளைக் கொண்டு இயற்கை உரம் தயாரித்தல் அவற்றை பள்ளி வாக்களில் பயன்படுத்தல்,மூலிகை செடிகளை வளர்த்தல் குடும்பத்தார் மற்றும் அருகாமையில் வசிப்பவர்களிடம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துதல், துணிப்பை தயாரித்து விநியோகித்தல் உள்ளிட்ட பல்வேறு தூய்மை பணிகளில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் பணிகளில் சிறப்பாக செயல்பட்ட பள்ளிகளுக்கு பரிசு வழங்கும் விழா குன்னூரில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட மாணவிகள் தாங்கள் மேற்கொண்ட தூய்மை பணிகளை விளக்கக் காட்சி அளித்தனர்.சிறப்பு நடுவர் குழு இந்த விளக் காட்சிகளை ஆய்வு செய்து சிறப்பாக தூய்மை சேவை மேற்கொண்ட தேர்வு செய்தனர். இதில் கன்டோன்மென்ட் பள்ளி முதலிடம் பிடித்தது. மெட்ராஸ் ரெஜிமென்ட் இன் கமாண்டன்ட் பிரிகேடியர் கிருஷ்ணேந்து தாஸ்,சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றி வெற்றி பெற்றவர்ளுக்கு கோப்பை மற்றும் பரிசுத்தொகையினை,வழங்கினார். இந்த போட்டியில் குன்னூர் சுற்றுவட்டார பகுதியை சேர்ந்த 8 பள்ளிகள் கலந்து கொண்டன மற்றும் இந்த நிகழ்ச்சியை கண்டோன்மெண்ட் சார்பில் ஒருங்கிணைப்பு செய்யபட்டு இருந்தது மற்றும் இந்த நிகழ்ச்சியில் வெலிங்டன் கண்டோன்மென்ட் நிர்வாக முதன்மை அதிகாரி டிக்குனி சிந்தியா, முதன்மை பொறியாளர் சுரேஷ், சுகாதார அலுவலர் ராதாகிருஷ்ணன், சுகாதார ஆய்வாளர்கள் பழனிசாமி,பூரணி, மற்றும் அலுவலக ஊழியர்கள், தூய்மை பணியாளர்கள், பள்ளி மாணவர்கள், மாணவிகள், பள்ளி ஆசிரியர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## பெண்கள் பாதுகாப்பு, கனிமவள கடத்தல் தடுப்பிற்கு முன்னுரிமைபுதியதாக பொறுப்பேற்றுள்ள மாவட்ட எஸ்பி தகவல்

### எஸ்.பி.,யாக அனிதா என்பவர் கடந்த 16ம் தேதி பொறுப்பேற்றார்

கிருஷ்ணகிரி, ஜூன்.20-

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பெண்கள் பாதுகாப்பு, கனிமவள கடத்தல் தடுப்பிற்கு முன்னுரிமை வழங்கப்படும் என புதியதாக பொறுப்பேற்றுள்ள மாவட்ட எஸ்பி கூறினார்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தின் 20வது எஸ்.பி.,யாக அனிதா என்பவர் கடந்த 16ம் தேதி பொறுப்பேற்றார். மாவட்ட எஸ்.பி., அலுவலகத்தில் நேற்று அவர் நிருபர்களிடம் கூறியதாவது: கிருஷ்ணகிரி மாவட்ட புதிய எஸ்.பி.,யாக பொறுப்பேற்றுள்ளேன். இம்மாவட்டம் மாநில எல்லையை ஒட்டி அமைந்துள்ளது. மேலும் மலைக்கிராமங்களும் அதிகளவில் உள்ளது. மாவட்டத்தில் உள்ள முக்கிய பிரச்னைகள் குறித்து கேட்டு வருகிறேன். முதலில் மாவட்டத்தில் பள்ளி மாணவியர், சிறுமியர்களுக்கு எதிராக நடக்கும் குற்ற சம்பவங்களை தடுத்து பெண்கள் பாதுகாப்புக்கு முன்னுரிமை அளிக்கும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படும்.

பள்ளி, கல்லூரிகளில் மாணவியருக்கு, ‘குட் டச்’, ‘பேட் டச்’ என கூறுவதை விட, பெண்களை தொட்டு



பேசுவதே தேவையற்ற செயல் என்ற விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும். மலைக்கிராமங்கள் உள்ளிட்ட பகுதிகளில் இன்றளவும் குழந்தை திருமணங்கள் அதிகரித்துள்ளது. நேற்று கூட ஒருபகுதியில் குழந்தை திருமணம் நிறுத்தப்பட்டதாக போலீசார் கூறினர். குழந்தை திருமணத்தால் பெண்கள் தங்கள் எதிர்காலத்தை தொலைத்து விடுகின்றனர் என்ற எண்ணத்தை அவர்களுக்கு ஏற்படுத்தப்படும்.

மாவட்ட எல்லையை ஒட்டி ஆந்திரா, கர்நாடக மாநிலங்கள் உள்ளன. இங்கிருந்து அதிகளவில் கனிமவளங்கள் கடத்தப்படுவதாகவும், புகார்கள் வருகின்றன. எனவே மாவட்ட எல்லையில் உள்ள சோதனைச்சாவடிகளில் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு, கனிம வள கடத்தலை தடுக்கும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படும். கட்டப்பஞ்சாயத்து, ரவுடிசம், அனுமதியின்றி பேனர்கள் வைப்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். குற்றவாளிகளை கண்டறியாத வழக்குகளில், குற்றவாளிகளை பிடிக்க தனிப்படை போலீசார் அமைக்கப்படும். பொறுப்பேற்று இரு நாட்கள் மட்டுமே ஆகிறது. மேலும் அனைத்து டிவிசன்களில் உள்ள பிரச்னைகள் குறித்து ஆராய்ந்து ஒவ்வொரு நடவடிக்கையாக மேற்கொள்ளப்படும். ஓசூர் உட்பட மாவட்டம் முழுவதும் ரவுடிகள் தொடர் கண்காணிப்பில் இருந்து வருகிறார்கள். பொது அமைதியை கெடுக்கும் வகையில் யார் செயல்பட்டாலும் சட்டப்படி நடவடிக்கை எடுப்போம். பாலியல் வழக்குகளில் புகார் வந்தவுடன் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தாலும், உண்மை தன்மை அறிந்த பிறகே மேல் நடவடிக்கை எடுக்கப்படும். பொய் புகார்கள் அளிப்பவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அவர் தெரிவித்தார். அப்போது தனிப்பிரிவு போலீஸ் இன்ஸ்பெக்டர் சம்பத்குமார், எஸ்ஐ சந்துரு உள்ளிட்டோர் உடனிருந்தனர்.



■ மதுரை மாவட்ட நிர்வாகம் மற்றும் பள்ளிக் கல்வித்துறையின் மூலம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாணவமாணவிகளுக்கான உயர் கல்வி வழிகாட்டுதல் சார்ந்த குறைதீர் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் ப.ஆகாஷ் மாணவர்களுக்கு உயர் கல்வி சேர்க்கைகான ஆணையை வழங்கினார். மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் தயாளன் உடன் உள்ளார்.



■ தேனி மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலராக லெ.பாண்டி (18.06.2026) அன்று பொறுப்பேற்றுக் கொண்டார்.

## தனக்குப் பிறந்தநாள் வாழ்த்துக் கூறிய திமுக தலைவர் மு.க.ஸ்டாலினுக்கு ராகுல் காந்தி நன்றி

டெல்லி, ஜூன்.20-

"இந்தியாவின் கொள்கை, நமது அரசியலமைப்பு மற்றும் கூட்டாட்சித் தத்துவத்தைப் பாதுகாப்பதற்கான நமது கூட்டு உறுதிப்பாடு நம்மைத் தொடர்ந்து வழிநடத்தும் இது நமது ஜனநாயகத்தின் ஆன்மாவிற்கான போராட்டம், நாம் வெற்றி பெறும் வரை இதனை ஒன்றிணைந்து நடத்துவோம்" என தனக்குப் பிறந்தநாள் வாழ்த்துக் கூறிய திமுக தலைவர் மு.க.ஸ்டாலினுக்கு ராகுல் காந்தி நன்றி தெரிவித்தார்

## தேனி மாவட்டம்மனநலம் பாதிக்கப்பட்ட 4 வெளிமாநில நபர்களை மீட்டு, உரிய சிகிச்சைக்குப்பின் அவர்களது சொந்த ஊர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் மரு. இரா. வைத்திநாதன், முன்னிலையில் அனுப்பி வைக்கப்பட்டனர்

தேனி, ஜூன்.20-

தேனி மாவட்டம், அரசு மனநலக் காப்பகத்தில் மனநலம் பாதிக்கப்பட்ட 4 வெளிமாநில நபர்களை மீட்டு, உரிய சிகிச்சைக்குப்பின் அவர்களது சொந்த ஊர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் மரு. இரா. வைத்திநாதன், முன்னிலையில் அனுப்பி வைக்கப்பட்டனர்.தேனி அரசு மனநலக் காப்பகத்தில் இயங்கி வரும் ECRC (Early Care and Rehabilitation Centre) பிரிவில் தற்போது 37 பேர் உள்நோயாளிகளாகச் சிகிச்சை பெற்று வருகின்றனர். இவர்களில் கடந்த ஆறு மாதங்களில் பல்வேறு இடங்களில் சுற்றித் திரிந்த நிலையில், கண்டறியப்பட்ட வெளிமாநிலங்களைச் சேர்ந்த மனநலம் பாதிக்கப்பட்ட ரேகா தேவி, கழு, ஸ்ரீகாந்த்



மற்றும் .உன்னி ஆகிய நான்கு நபர்கள் உள்நோயாளிகளாக அனுமதிக்கப்பட்டு தொடர் சிகிச்சை பெற்று வந்தனர்.மருத்துவர்களின் உரிய சிகிச்சை மற்றும் பராமரிப்பின் மூலம் அவர்கள் தற்போது முழுமையாக குணமடைந்துள்ளனர். இதையடுத்து, அவர்களது குடும்பத்தினருடன் அவர்களை மீண்டும் இணைக்கும் நோக்கில், மும்பையில் செயல்பட்டு வரும் Shraddha Rehabilitation Foundation அமைப்பின் உதவியுடன் அடுத்தகட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

அதன்படி, இன்று மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள்முன்னிலையில், நான்கு வெளிமாநில மருத்துவப் பயனாளர்களும் ECRC சமூகப்பணியாளர் 2 நபர்கள் மற்றும் Shraddha Rehabilitation Foundation அமைப்பின் 2 பணியாளர்கள் மூலம் மும்பைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். மும்பையில் உள்ள Shraddha Rehabilitation Foundationஇல் அவர்கள் சுமார் இரண்டு மாதங்கள் வரை மறுவாழ்வு மற்றும் தொடர் சிகிச்சை பெற்று, அதன் பின்னர் அவர்களது உறவினர்கள் மற்றும் குடும்பத்தினரை கண்டறியும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, அவர்களிடம் ஒப்படைக்கப்பட உள்ளனர்.

இந்நிகழ்வில் இசிஆர்சி மனநல மருத்துவர் மரு.ராஜேஷ், மருத்துவர்கள் மரு.மகாலக்ஸ்மி, மரு.கணகபூரணி உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

# ஸ்ரீ விஜய கணபதி ஆலய ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேக விழா வெகு சிறப்பாக நடைபெற்றது



சென்னை, ஜூன்.20-

சென்னை உள்ளகரம், கிருஷ்ணா நகர் திலகர் தெருவில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ விஜய கணபதி ஆலய ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேக விழா வெகு சிறப்பாக நடைபெற்றது. உள்ளகரம் பகுதியில் 50 ஆண்டுகளாக ஸ்ரீ விஜய கணபதி சுவாமி பரிவார தேவதைகளான ஸ்ரீ விஜயகுமார சுவாமி, விஜயராகவ சுவாமி, விஜய மணிகண்ட சுவாமி, விஜயதுர்கா தேவி, விஜயா மாருதி சுவாமி மற்றும் நவகிரக தேவதைகளுடன் வேண்டிய வரங்கள் தந்து அருள்பாலித்து வருகின்றனர். இந்த ஆலயத்தின் திருப்பணிகள் ஆச்சாரியார்களின் அனுக்கிரகத்துடனும் இறைவனது அருள் ஆசியுடனும் சிறப்பாக நடைபெற்று வந்துள்ளது. நிகழும் பராபவ ஆண்டு ஆனித்திங்கள் 4 ஆம் நாள் வியாழக்கிழமை சுபயோக சுப தினத்தில் சிம்ம லக்னத்தில் ஸ்ரீஸ்ரீஸ்ரீ காஞ்சி மகா பெரியவா சங்கராச்சாரியார் சுவாமிகள், அனுகிரகத்தாலும் ஸ்ரீஸ்ரீஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சங்கராச்சாரியார், ஸ்ரீஸ்ரீஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சங்கராச்சாரியார் முன்னிலையில், ஸ்ரீஸ்ரீஸ்ரீ சத்திய சந்திரசேகர சரஸ்வதி சங்கராச்சாரியார் சுவாமிகள் அனுகிரகத்துடனும் மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. மேலும் ஆலய விழா குழுவினர் சிறப்பாக கும்பாபிஷேகத்தை நடத்தினர். வருகை தந்த அனைத்து பக்தர்களுக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.

# குன்னூர் பழவியல் நிலையத்தில் 1ஏக்கர் பரப்பளவில் உள்ளூர் பழ நாற்றுகள் நடவு செய்யும் பணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் துவக்கி வைத்தார்




நீலகிரி, ஜூன்.20-

நீலகிரி மாவட்டத்தை தாயகமாக கொண்ட பழங்களின் சாகுபடியை புதுப்பிக்கும் நோக்கில் குன்னூர் பழவியல் நிலையத்தில் 1 ஏக்கர் பரப்பளவில் உள்ளூர் பழ நாற்றுகள் நடவு செய்யும் பணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு துவங்கி வைத்தார்.நீலகிரி மாவட்டத்தை தாயகமாக கொண்ட பழங்களின் சாகுபடியை புதுப்பிக்கும் நோக்கில், தவுட்டு பழம், ஊசி பழம், குரங்கு பழம், நாட்டு அத்தி, காட்டு கொய்யா, காட்டு நாவல், விக்கி பழம் போன்ற நாற்றுக்களை உற்பத்தி செய்து பல்வேறு விவசாயிகளுக்கு வழங்கி சாகுபடியை புதுப்பிக்கும் முயற்சி மேற்கெள்ளப்பட்டது.மேலும் பழ பயிர்கள் மட்டுமல்லாது சிங்பூங்காவில் நீலகிரி மாவட்டத்தை தாயகமாக கொண்ட அலங்கார மரங்கள், பூக்கும் மரங்கள் என அனைத்து மரங்களின் நாற்றுகளை உற்பத்தி செய்ய அறிவுரை வழங்கினார்.மேலும், குன்னூரை சார்ந்த பழசாகுபடி விவசாயி திரு.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பழ பயிர்களான பீச், பிளம், பேரி, திராட்சை போன்ற பல்வேறு பழ பயிர்களை சாகுபடி செய்து வருகிறார். அன்னரது தோட்டத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் பார்வையிட்டார்.மேலும், உலிக்கல் பகுதியை சேர்ந்த ஜெயந்தி பிரேம்குமார் பல்வேறு வகையான ஆரஞ்சு, எலுமிச்சை போன்ற பழங்களை சாகுபடி செய்து வருகிறார். அவரது ஆரஞ்சு பழ தோட்டத்தையும் பார்வையிட்டார்.இந்நிகழ்ச்சியில், தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் சிவக்குமார், உதவி இயக்குநர் (குன்னூர்) விஜயலட்சுமி, உட்பட தோட்டக்கலைத்துறை அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

# ஸ்ரீ பாலமுருகன் ஆலயத்தில் மஹா கும்பாபிஷேகம் விழா





மாதவரம், ஜூன்.20-

மாதவரம் தொகுதி செங்குன்றம் நாரவாரிகுப்பம் பேரூராட்சி திருவள்ளுவர் தெருவில் எழுந்தருளி இருக்கும் அருள்மிகு ஸ்ரீ பாலமுருகன் ஆலயத்தில் புனராவர்த்தன வர்ணகலாபன சித்ரகலாபன அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம் விழா ஆலய தர்மகர்த்தா வி.செல்வராஜ் எஸ்.ஏகவள்ளி மற்றும் ஆலய இளைஞர்கள்குழு உட்பட கிராமபொதுமக்கள் ஏற்பாட்டில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் விக்னேஷ்வரபூஜை, கணபதி ஹோமம், கோபூஜை, யாகசாலை பூஜை, வாஸ்துசாந்தி, பிரவேசபலி, அங்குரார்ப்பணம், பூர்ணாஹீதி, புண்ணியாவாசனம், கலசபூஜை ,முதல் நான்குகால யாகசாலை பூஜைகள் உள்ளிட்ட பல்வேறு சிறப்பு பூஜைகள், ஹோமங்கள் நடைபெற்றது. பின்னர் யாகசாலையில் சிறப்பு பூஜைகள் செய்யப்பட்ட புனிதநீர் கலசங்களை மேளதாளத்துடன் கொண்டு சென்று ஆலய விமானம் மற்றும் மூலவர் உள்ளிட்ட பரிவார தெய்வங்களுக்கு மஹா கும்பாபிஷேகம் செய்து தீபாராதனை காண்பிக்கப்பட்டது. இதனைத்தொடர்ந்து புனிதநீரை பக்தர்கள் மீது தெளித்தனர்.பின்னர் சுவாமிகளுக்கு சிறப்பு அலங்காரம் செய்து தூபதீப ஆராதனை காண்பிக்கப்பட்டது. இவ்விழாவிற்கு இளைஞர்கள், சுற்றுவட்டார பக்தர்கள் மற்றும் கிராமபொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். மேலும் ஆலயம் சார்பில் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கினர். முடிவில் உற்சவர் சிறப்பு அலங்காரத்துடன் மேளதாள வானவேடிக்கைவுடன் திருவீதி உலாநடைபெற்றது.




# மக்கள் தொகை கணக்கெடுப்பு பணிகளப்பணியாளர்களுக்கு 3 நாள் பயிற்சிதுவங்கியது

கிருஷ்ணகிரி, ஜூன்.20-

மக்கள் தொகை கணக்கெடுப்பு பணியில் ஈடுபட உள்ளவர்களுக்கு பயிற்சிகள் அளிக்கும் களப்பணியாளர்களுக்கு 3 நாள் பயிற்சி துவங்கியது.

கிருஷ்ணகிரி மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில், மக்கள்தொகை கணக்கெடுப்பு 2027 பணியில் ஈடுபட உள்ளவர்களுக்கு பயிற்சிகள் அளிக்கும் களப்பயிற்சியாளர்களுக்கு 3 நாள் பயிற்சி வகுப்புகளை மாவட்ட வருவாய் அலுவலர் சாதனைக்குறள் தொடங்கி வைத்தார். அப்போது அவர் பேசியதாவது: மாவட்டத்தில் மக்கள் தொகை கணக்கெடுப்பு பணியில் சுமார் 4000 பேர் ஈடுபட உள்ளனர். இப்பணியில் ஈடுபட உள்ள கணக்கெடுப்பாளர்கள், மேற்பார்வையாளர்களுக்கு பயிற்சிகள் அளிக்க, ஆசிரியர்கள் மற்றும் புள்ளியில் துறையை சேர்ந்த 72 அலுவலர்கள் களப்பயிற்றுநர்களாக கலெக்டர் நியமித்துள்ளார். அவ்வாறு நியமிக்கப்பட்ட உள்ளவர்களுக்கு இன்று (நேற்று) முதல் வருகிற 20ம் தேதி வரை 3 நாட்கள் பயிற்சி வகுப்புகள் நடைபெறுகிறது. மக்கள்தொகை கணக்கெடுப்பு 2 கட்டங்களாக நடைபெற உள்ளது. இணையதளத்தின் மூலம் முதல் முறையாக டிஜிட்டல் தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட உள்ளது. மாவட்டத்தில் மக்கள்தொகை கணக்கெடுப்பு முதல் பணியான வீட்டுப்பட்டியல் மற்றும் வீடுகள் கணக்கெடுப்பு வருகிற ஆகஸ்ட் 1ம் தேதி முதல் 30ம் தேதி வரை 30 நாட்களுக்கும், மக்கள்தொகை சுய கணக்கெடுப்பு வருகிற ஜூலை மாதம் 17ம் தேதி முதல் 31ம் தேதி வரை மேற்கொள்ளப்பட உள்ளது. மக்கள் தொகை கணக்கெடுப்பில் சுயகணக்கெடுப்பு மற்றும் டிஜிட்டல் முறை கணக்கெடுப்பு முதல் முறை அறிமுகப்படுத்தப்படுகிறது. பொதுமக்கள் தாங்களாகவே இணையதளம் வாயிலாக தங்கள் விவரங்களை தெரிவிக்கலாம், என்றார்.

இப்பயிற்சி வகுப்பில் சென்னை மக்கள் தொகை கணக்கெடுப்பு உதவி இயக்குநர்கள் சஜிலால், சஜிதா அஸீஸ், மாவட்ட புள்ளியியல் துணை இயக்குநர் குப்புசாமி, கலெக்டரின் நேர்முக உதவியாளர் (பொது) கிருஷ்ணன், உதவி இயக்குநர் (புள்ளியியல்) மாளவிகா உட்பட துறைச்சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# திருப்பூர் மாவட்டத்தில் அதிக மதிப்பெண்கள் பெற்ற மாற்றுத்திறன் மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் பரிசுகள் மாவட்ட ஆட்சியர் வழங்கினார்



திருப்பூர், ஜூன்.20-

.திருப்பூர் மாவட்ட ஆட்சியர் டாக்டர்.மனிஷ் நாரணவரே மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் திருப்பூர் மாவட்டத்தில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 10 ஆம் வகுப்பு பயின்ற 20 மாற்றுத்திறன் மாணவ, மாணவியர்கள் மற்றும் 12 ஆம் வகுப்பு பயின்ற 14 மாற்றுத்திறன் மாணவ, மாணவியர்கள் 2025 2026 ஆம் கல்வியாண்டில் பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்ற மாற்றுத்திறன் மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் மாணவர்களை வாழ்த்தி கேடயங்களை வழங்கினார்கள். 10 மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்ற மாற்றுத்திறன் மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பள்ளி பருவம் வாழ்க்கையில் மிக முக்கியமான காலகட்டம் ஆகும். இக்காலகட்டத்தில் பள்ளியில் பயிலும் மாணவர்கள் முன்னேற்றம் அடைய பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களின் ஆதரவு மிகவும் முக்கியம். 10ம் மற்றும் 12ம் வகுப்பு பொதுத்தேர்வு மதிப்பெண் அடிப்படையில் தான் மாணவர்களின் உயர்கல்வி அமைகிறது. நன்கு படித்தால் மட்டுமே வாழ்க்கையில் சிறந்த இடத்திற்கு வர முடியும். அதற்கான தொடர் முயற்சிகளை மாணவர்கள் மேற்கொள்ள வேண்டும். மாணவர்களுக்கு பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் உறுதுணையாக இருக்க வேண்டும். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர். மனிஷ் நாரணவரே தெரிவித்தார்கள்.தொடர்ந்து, மாவட்ட ஆட்சியர் தேசிய அளவிலான பாரா ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டியில் தங்கம் வென்று மாவட்டத்திற்கு பெருமை சேர்த்துள்ள 2 மாணவர்களின் சாதனையை வாழ்த்தி ஊக்குவிக்கும் விதமாக கேடயங்களை வழங்கியும், 14 மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு அறுவை சிகிச்சை மேற்கொள்ள உதவி புரிந்த நன்கொடையாளர்களுக்கு பொன்னாடை அணிவித்து கேடயங்களை வழங்கி பாராட்டு தெரிவித்தார்கள்.

முன்னதாக, மாவட்ட ஆட்சியர் திருப்பூர் மாவட்டத்தில் நடைபெற்று முடிந்த 10 மற்றும் 12 ம் வகுப்பு பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்ற மாற்றுதிறன் மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் கேடயங்களை வழங்கி வாழ்த்து தெரிவித்தார்கள். இந்நிகழ்ச்சியில், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் ஆ.புனிதா அந்தோணியம்மாள், மாவட்டக்கல்வி அலுவலர் (இடைநிலை) காளிமுத்து, மாவட்ட உதவித்திட்ட அலுவலர் இலி. அண்ணாதுரை, ஆசிரியர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

## பத்திரம் காணவில்லை

**அ/நக/ எண்: 2125/1999**
**(தாராபுரம் சார்பதிவாளர் அலுவலகம்)**
**புகார் எண் : OLC9372600030270**

**திருப்பூர் மாவட்டம், தாராபுரம் தாலுகா, க.எண்.64 D மேற்கு வீதி டி காளிபாளையம் என்ற முகவரியில் வசித்துவரும் அமீர் அம்ஜா மனைவி A.ரசிதா பேகம் அவர்களின் கணவர் அமீர் அம்ஜா (04.03.2021) என்ற தேதியில் பட்டா மாறுதல் காரணமாக தாராபுரம் தாலுகா அலுவலகம் சென்றபோது அருகில் உள்ள ஜெராக்ஸ் எடுக்க சென்றபோது தானசெட்டில்மெண்ட் பத்திரம் (ஆவண எண் 2125/1999) தவறிவிட்டது. ஆன்லைன் மூலமாக கடந்த 18.06.2026 அன்று தாராபுரம் காவல்நிலையத்தில் ஆன்லைன் புகார் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி பத்திரம் யாரேனும் கண்டெடுத்தால் அருகில் உள்ள காவல் நிலையத்திலோ அல்லது கீழ் கண்ட முகவரி மற்றும் தொலைபேசி எண்ணுக்கு தகவல் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.**

**இவண் :**
**MA.அமீர் அம்ஜா**
**64D,மேற்கு வீதி டி.காளிபாளையம்**
**தாராபுரம் தாலுகா, திருப்பூர் மாவட்டம்.**
**செல்: 9500927258**



■ மதுரை மாநகராட்சி தமுக்கம் சாலையில் உள்ள இராஜாஜி பூங்காவில் குடிநீர் வசதி மற்றும் சுகாதாரம் குறித்து ஆணையாளர் கௌரவ் குமார், நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார் அருகில் உதவி நகர்நல அலுவலர் மரு.அபிஷேக் , உதவி செயற்பொறியாளர் காமராஜ் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்.

# முதலமைச்சர் விஜய் பிறந்தநாள் விழா...கிராம மக்களின் கோரிக்கையை ஏற்று சாலை சீமைக்கருவேல மரங்களை அப்புறப்படுத்திய தவெக நிர்வாகி பனங்காடி பாலாஜி மா செ. முத்துபாரதி இ செ. காளீஸ்வரன் ஒ செ. ஆரோக்கியராஜா அறிவுறுத்தல்



சிவகங்கை, ஜூன் .20-

தமிழ்நாடு முழுவதும் முதலமுமுதலமைச்சர் ஜோஸப் விஜய் பிறந்தநாளை முன்னிட்டு தவெகவினர் நலத்திட்ட உதவிகள் வழங்கியும். பள்ளி மாணவ மாணவியர்க்கு கல்வி உபகரணங்கள் வழங்கியும் . சிறப்பு வழிபாடு அன்னதானம் உள்ளிட்ட செயல்களைச் செய்து பிறந்த நாளை வெகு சிறப்பாக கொண்டாடி வருகின்றனர்...அந்த வகையில் காளையார்கோவில் மேற்கு ஒன்றிய தவெக சார்பில் தெற்கு மாவட்ட செயலாளர் முத்துபாரதி . மாவட்ட இணைச் செயலாளர் காளையார்கோவில் காளீஸ்வரன் மற்றும் காளையார்கோவில் மேற்கு ஒன்றிய செயலாளர் ஆரோக்கியராஜா ஆகியோரது ஆலோசனையின் பேரில் நாட்டரசன்கோட்டை கூட்டுறவு சங்க மேனாள்

தலைவரும் தவெக நிர்வாகியுமான பனங்காடி பாலா என்ற இராம பாலாஜி என்பவர் பொதுமக்கள் பயன்படுத்தி வரும் சுமார் 3 கிலோமீட்டர் தொலைவிற்கு சாலையின் இருமறுங்கிலும் ஓங்கி வளர்ந்திருந்த சீமைக்கருவேல மரங்கள் மற்றும் முட்புதர்களை தனது சொந்த நிதி ஆதாரத்தில் இருந்து ஜேசிபி இயந்திரம் கொண்டு சுத்தம் செய்யும் பணிகளை மேற்கொண்டார்...

முதலமைச்சர் பிறந்தநாள் விழாவை கிராம மக்களின் நலன்கருதி இப்பேர்ப்பட்ட முன்னெடுப்பினை செய்யத் துணிந்த பாலாஜியை நாம் சந்தித்தோம்...இதுகுறித்து பனங்காடி பாலாஜியிடம் நாம் பேசியபோது அவர் கூறுகையில் மதுரை தொண்டி தேசிய நெடுஞ் சாலை நாட்டரசன்கோட்டை தண்ணீர் பந்தல் விலக்கிலிருந்து சுமார் மூன்று கிலோமீட்டர் தொலைவில் தனது சொந்த கிராமம் பனங்காடி உள்ளதாகவும்... இந்த மெயின் ரோட்டிலிருந்து பனங்காடி . சாத்தனி . இராணியூர் . ஒய்யவந்தான் . வீராணி. விஜயமாணிக்கம் . அல்லூர் . சூரவத்தி உள்ளிட்ட பத்திற்கும் மேற்பட்ட கிராமங்களுக்கு போக்குவரத்தானது இதே சாலையைத் தான் பயன்படுத்தி வருவதாகவும் . அத்தியாவசியங்கள் மற்றும் மருத்துவ சேவைகளுக்கு இந்த சாலையில் தான் பொதுமக்கள் பயணம் மேற்கொள்வதாகவும். இந்த சாலையின் பயன்படுத்த லாயக்கற்ற வகையில் இருமறுங்கிலும் சீமைக்கருவேல மரங்கள் மற்றும் முட்புதர்கள் அதிக அளவில் வளர்ந்து போக்குவரத்திற்கு இடையூறாக வளர்ந்திருந்தது...மேலும் இப்பகுதி கிராம மக்களின் நீண்ட கால கோரிக்கையை ஏற்று தனது சொந்த நிதியிலிருந்து சீமைக்கருவேல மரங்களை சுத்தம் செய்ததாகவும் தெரிவித்தார்...மேலும் அவர் கூறுகையில் இப்பகுதியில் திருச்செந்தூர் செந்தில் ஆண்டவர் முருகன் ஆலயம் உள்ளதாகவும் இங்கு ஒவ்வொரு பிரதி செவ்வாய் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் அதிகளவு பக்தர்கள் குறிப்பாக திரைத்துறை பிரபலங்கள் மற்றும் அரசியல். சமுதாய தலைவர்கள் பலரும் வந்து செல்வதனாலும் பொதுமக்கள் மிகுந்த சிரமத்திற்கு ஆளானதாலும் நான் எங்களது தலைவர் ஜோஸப் விஜயின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு இந்த மக்கள் பணிகளை மேற்கொள்கிறேன் எனவும் தெரிவித்தார்...

முதலமைச்சர் பிறந்தநாள் விழாவினை முன்னிட்டு செய்திடும் இந்த பணிகளுக்கு தனக்கு ஊக்கப் படுத்திய சிவகங்கை தெற்கு மாவட்டக் கழக செயலாளர் முத்துபாரதி. மாவட்ட இணைச் செயலாளர் காளீஸ்வரன் . காளையார்கோவில் மேற்கு ஆரோக்கியராஜா . ஒன்றிய மகளிரணி அருணாதேவி பழனிவேல்ராஜன். அல்லூர் முனீஷ்வரன். அல்லூர் பழனிவேல்ராஜன் . பனங்காடி பாலு உள்ளிட்ட கிராமப் பொதுமக்களுக்கும் தனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்வதாகவும் பேசினார்... ஒவ்வொருவரும் தலைவர்கள் பிறந்தநாள் விழா அல்லது தங்களது பிறந்தநாளை கேக் வெட்டியும் அன்னதானம் . போன்ற காரியங்களைச் செய்யும் வேளையில் தவெக நிர்வாகி பனங்காடி பாலாஜி செய்கின்ற மக்கள் பணிகளை நேரில் பார்த்த நாமும் அவருக்கு வாழ்த்துகளையும். மிகப்பெரிய நன்றிகளையும் கூறிவிட்டு கிளம்பிவிட்டார்..

# மானாமதுரை பள்ளி வளாகத்தில் முட்செடிகள் அகற்றம் - தமிழக வெற்றிக்கழகம் நடவடிக்கை





மானாமதுரை, ஜூன். 20-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை கண்ணார் தெருவில் உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி வளாகத்தில் மாணவர்களுக்கு இடையூறாக இருந்த முட்செடிகள் மற்றும் குப்பைகள் அகற்றப்பட்டன. கடந்த வாரம் பள்ளி வளாகத்தை தமிழக வெற்றிக்கழகத்தின் நகரச் செயலாளர் நம்பிராஜன் மற்றும் நகர இணைச் செயலாளர் ராஜேஸ்கண்ணன் ஆகியோர் நேரில் ஆய்வு செய்தனர். அப்போது பள்ளி வளாகத்தில் நீண்ட நாட்களாக முட்செடிகள், முள்ளுகள் மற்றும் குப்பைகள் தேங்கி கிடப்பது கண்டறியப்பட்டது. இதையடுத்து, தமிழக வெற்றிக்கழகத்தின் நகர கொள்கை பரப்பு செயலாளர் அருண்பாண்டியன் முன்னிலையில் நகராட்சி தூய்மைப் பணியாளர்கள் மூலம் பள்ளி வளாகத்தில் சுத்தம் செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டது. இதில் குப்பைகள் அகற்றப்பட்டதுடன், மாணவர்களின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக இருந்த முட்செடிகளும் முழுமையாக அகற்றப்பட்டன. பள்ளி வளாகம் தூய்மைப்படுத்தப்பட்டதை அடுத்து மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் மகிழ்ச்சி தெரிவித்ததுடன், நடவடிக்கை எடுத்த தமிழக வெற்றிக்கழக நிர்வாகிகளுக்கும் நகராட்சி நிர்வாகத்திற்கும் நன்றி தெரிவித்தனர்.

# சிவகங்கையில் மக்கள் நலனே முதன்மை - புதிய ஆட்சியர் நிஷாந்த் கிருஷ்ணா




சிவகங்கை, ஜூன்.20-

சிவகங்கை மாவட்டத்தின் புதிய ஆட்சியராக பொறுப்பேற்றுள்ள நிஷாந்த் கிருஷ்ணா, மக்கள் குறைகளுக்கு முன்னுரிமை அளித்து உடனடி தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதியளித்துள்ளார். சிவகங்கை மாவட்ட ஆட்சியராக பணியாற்றி வந்த கா. பொற்கொடி பணியிட மாற்றம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து, நாகர்கோவில் மாநகராட்சி ஆணையராக இருந்த நிஷாந்த் கிருஷ்ணா புதிய மாவட்ட ஆட்சியராக நியமிக்கப்பட்டார். அவர் நேற்று முன்தினம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பொறுப்பேற்றுக் கொண்டார். பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மாவட்டத்தில் குடிநீர் வசதியை மேம்படுத்துதல், சாலை உள்ளிட்ட அடிப்படை கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்துதல் ஆகியவற்றுக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்றார். மேலும், அரசின் நலத்திட்டங்கள் அனைத்து தரப்பு மக்களையும் சென்றடைய தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவித்தார். அலுவலர்கள், மக்கள் பிரதிநிதிகள், செய்தியாளர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோருடன் ஒருங்கிணைந்து குழுவாக செயல்பட்டு மாவட்ட வளர்ச்சிக்கான பணிகளை முன்னெடுப்பேன் எனவும் அவர் கூறினார். அதேபோல், கனிமவளக் கடத்தலை தடுக்க கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும், அலுவலர்களுடன் ஆலோசனை நடத்தி மாவட்டத்தில் முடங்கிக் கிடக்கும் திட்டங்களை விரைந்து செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவித்தார்.2014 முதல் 2018 வரை மேகாலயா மாநிலத்தில் ஐபிஎஸ் அதிகாரியாக பணியாற்றிய நிஷாந்த் கிருஷ்ணா, 2018 ஆம் ஆண்டு ஐஏஎஸ் அதிகாரியாக தேர்வானார். அதன் பின்னர் ஈரோடு மாவட்டத்தில் உதவி ஆட்சியராக (பயிற்சி), ஸ்ரீரங்கம் மற்றும் ஓசூரில் சார்ஆட்சியராக, தமிழ்நாடு தொழில் முன்னேற்றக் கழகமான சிப்காட் நிறுவனத்தின் செயல் இயக்குநராகவும், நாகர்கோவில் மாநகராட்சி ஆணையராகவும் பணியாற்றியுள்ளார். மாவட்ட வளர்ச்சி மற்றும் மக்கள் நலப் பணிகளுக்கு முன்னுரிமை அளிப்பதாக புதிய ஆட்சியர் தெரிவித்திருப்பது பொதுமக்களிடையே எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

# முதியவர் மீது கல் வீசி தாக்குதல்: சிசிடிவி காட்சி வெளியானதால் பரபரப்பு




மானாமதுரை, ஜூன் .20-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை கிருஷ்ணராஜபுரம் காலனியில் முதியவர் ஒருவரை கல்லால் தாக்கிய சம்பவத்தின் சிசிடிவி காட்சிகள் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. அப்பகுதியைச் சேர்ந்த பாலு (60) என்பவர், தனது வீட்டின் அருகே வசித்து வரும் பாலமுருகன் என்பவரிடம், பாதையை மறிக்கும் வகையில் நிறுத்தப்பட்டிருந்த இருசக்கர வாகனத்தை ஓரமாக நிறுத்து மாறு கூறியதாக தெரிகிறது.இதை யடுத்து இருவருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்ட நிலையில், ஆத்திரமடைந்த பாலமுருகன் அருகில் கிடந்த பெரிய கல்லை எடுத்து பாலுவின் தலையில் தாக்கியதாக கூறப்படுகிறது. இந்த தாக்குதலில் பலத்த காயமடைந்த பாலுவுக்கு அதிக ரத்தக்கசிவு ஏற்பட்டது. அவரை அப்பகுதி மக்கள் மீட்டு முதலில் மானாமதுரை அரசு மருத்துவமனைக்கு அனுப்பினர். பின்னர் மேல் சிகிச்சைக்காக சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. சம்பவம் குறித்து மானாமதுரை காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டதைத் தொடர்ந்து போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில், தாக்குதல் சம்பவத்தின் சிசிடிவி காட்சிகள் சமூக வலைதளங்களில் பரவி வருவதால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. குற்றவாளி மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் வலியுறுத்தியுள்ளனர்.

# சிவகங்கை மாவட்ட செய்தி மக்கள் தொடர்புத் துறை அலுவலராக எஸ். ஜெகவீரபாண்டியன் பொறுப்பேற்பு



சிவகங்கை, ஜூன்.20-

சிவகங்கை மாவட்ட செய்தி மக்கள் தொடர்புத் துறை அலுவலராக எஸ். ஜெகவீரபாண்டியன் 18) அன்று பொறுப்பேற்றுக் கொண்டார். மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள செய்தி மக்கள் தொடர்புத் துறை அலுவலகத்தில் அவர் தனது பொறுப்பை ஏற்றுக் கொண்டு பணிகளை தொடங்கினார். அரசின் நலத்திட்டங்கள், மாவட்ட நிர்வாகத்தின் வளர்ச்சி நடவடிக்கைகள் மற்றும் பொதுமக்கள் நலன் சார்ந்த தகவல்களை ஊடகங்கள் வாயிலாக மக்களிடம் கொண்டு சேர்க்கும் பணியில் தொடர்ந்து சிறப்பாக செயல்படுவதாக அவர் தெரிவித்தார்

# மானாமதுரை ஆகாஷ் காவல் நிலைய மரண வழக்கு: 6 காவலர்கள் மீது CBCID குற்றப்பத்திரிகை தாக்கல்



சிவகங்கை, ஜூன்.20-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரையைச் சேர்ந்த இளைஞர் ஆகாஷ் காவல் நிலையத்தில் உயிரிழந்த வழக்கில், சிபிசிஐடி (CB-CID) விசாரணையை நிறைவு செய்து 6 காவல்துறையினருக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ளது.

இந்த வழக்கில் திருப்புவனம் காவல் நிலைய ஆய்வாளர் திலீபன், மானாமதுரை காவல் நிலைய உதவி ஆய்வாளர் குகன் மற்றும் காவலர்கள் காளீஸ்வரன், பழனி, தெய்வேந்திரன், மகேந்திரன் ஆகியோர் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. பெரும் பரபரப்பை ஏற்படுத்திய ஆகாஷ் காவல் நிலைய மரண வழக்கில், நீண்டகால விசாரணைக்குப் பிறகு சிபிசிஐடி தனது விசாரணையை முடித்து, சம்பந்தப்பட்ட 6 காவல்துறையினருக்கு எதிராக அதிகாரப்பூர்வமாக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்திருப்பது முக்கிய திருப்பமாகக் கருதப்படுகிறது. இந்த நடவடிக்கை வழக்கின் அடுத்தகட்ட சட்டநடவடிக்கைகளுக்கு வழிவகுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.



# முருகப்பா பள்ளியில் போதைப் பொருள் விழிப்புணர்வு நிகழ்ச்சி

கல்லல், ஜூன்.20-

சிவகங்கை மாவட்டம் கல்லலில் உள்ள கலலல் முருகப்பா மேல்நிலைப் பள்ளியில் போதைப் பொருள் தடுப்பு மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. போதைப்பொருள் தடுப்பு பள்ளி ஒருங்கிணைப்பாளர் சுப்பிரமணியன் வரவேற்புரை வழங்கினார். பள்ளியின் தலைமை ஆசிரியர் அழகப்பன் இந்நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கினார். மத்திய அரசு வழக்கறிஞரும், சிவகங்கை மாவட்ட குழந்தைகள் சட்ட சேவை உறுப்பினருமான முருகேசன் போதை பொருட்களினால் ஏற்படும் தீமைகளை எடுத்துக் கூறினார். இளம் வயது முதலே இதிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ள செய்ய வேண்டியவை என்னென்ன என்பதை மேல்நிலை மாணவ மாணவிகளின் முன்னிலையில் எடுத்துரைத்தார். நம் நாட்டின் இளைய சமுதாயம் போதைப் பொருட்களுக்கு அடிமையாகாத ஆரோக்கியமான சமுதாயமாக வளர வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். பத்தாம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் 400 மதிப்பெண்களுக்கு மேல் பெற்ற மாணவ மாணவிகளுக்கு வீரசேகர் இந்துமதி சார்பாக புத்தகங்களை நினைவு பரிசாக வழங்கினார். ஆசிரியர்கள் மோகன்ராசன் சாத்தையா சந்தானகிருஷ்ணன் கண்ணதாசன் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். பட்டதாரி ஆசிரியர் பிரபு நிகழ்ச்சிக்கு தேவையான ஏற்பாடுகளை செய்து ஒருங்கிணைத்தார்.




# சிவகங்கையில் தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் அலுவலர் மற்றும் ஆசிரியர்களின் செயற்குழுக்கூட்டம்

சிவகங்கை, ஜூன்.20-

சிவகங்கை நகர் பேருந்து நிலையம் அருகில் உள்ள பள்ளியில் தமிழ்நாடு மாற்றுத் திறனாளிகள் அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்கள் நலச் சங்கத்தின் சார்பாக செயற்குழு கூட்டம் நடைபெற்றது... சங்க மாவட்டத் தலைவர் சோம அசோக் பாரதி தலைமையிலும் மாவட்ட செயலாளர் தி. கண்ணன் முன்னிலையிலும் நடைபெற்றது...கூட்டத்தில் மாவட்ட துணைச் செயலாளர் காளிதாஸ் வரவேற்புரை நிகழ்த்திட கூட்டத்தில் பல்வேறு பொருட்கள் பற்றி விவாதிக்கப்பட்டது...இந்த கூட்டத்தில் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கல்வித்துறை நாச்சியப்பன். மாவட்ட இணைத் தலைவர் மாலதி. மாவட்ட இணைச் செயலாளர் குமார் . துணைச் செயலாளர் தனலெட்சுமி. இணைச் செயலாளர் ராஜேஷ்வரி உள்ளிட்ட நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்...கூட்டத்தில் பல்வேறு வகையான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.. தீர்மானம்1 தமிழகத்தில் புதிதாக பொறுப் பேற்றுள்ள தமிழக முதல்வர் ஜோசப் விஜய் அவர்களுக்கு சங்கத்தின் சார்பாக வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டது2 அனைத்து அலுவலகங்களிலும் மாற்றுத் திறனாளிகள் ஏதுவாக செல்வதற்கு சாய்வு தலப்பாதை அமைக்க வேண்டும்3 அனைத்து துறைகளிலும் மூன்று ஆண்டுகளுக்கு மேல தொகுப் பூதியத்தில் பணிபுரியும் மாற்றுத்திறனாளிகளை நிரந்தரம் செய்ய வேண்டும்4 மாற்றுத்திறனாளி அலுவலர்களுக்கு பதவி உயர்வில் நான்கு சதவீத இட ஒதுக்கீட்டை உடனே அமல்படுத்த வேண்டும் அனைத்து அலுவலகங்களிலும் மாற்றுத்திறனாளிகள் ஏதுவாக செல்வதற்கு லிப்ட் வசதி செய்ய வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது...

# மானாமதுரை நகராட்சியில் அசோக்குமார் இறப்பு பதிவு செய்யப்படவில்லை: நகராட்சி ஆணையர் சான்றிதழ்

சிவகங்கை. ஜூன்.20-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை நகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் அசோக்குமார் என்பவரின் இறப்பு பதிவு செய்யப்படவில்லை என்பதற்கான "பதிவு இல்லை சான்றிதழ்" (Non-Availability Certificate) வழங்கப்பட்டுள்ளது.பழனிசாமி மனைவி அங்காளேஸ்வரி என்பவர் அளித்த விண்ணப்பத்தின் அடிப்படையில், சிவகங்கை மாவட்டம் மானாமதுரை நகராட்சிக்கு உட்பட்ட "சரவணா ஸ்டோர் எதிரில் உள்ள குடோன்" பகுதியில் கடந்த 2018 முதல் 2020 வரையிலான மூன்று ஆண்டுகால இறப்புப் பதிவுப் பதிவேடுகள் தீவிர ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன.

இந்த ஆய்வின் முடிவில், பழனிசாமி மகன் அசோக்குமார் இறப்பு குறித்த எந்தவொரு பதிவும் நகராட்சிப் பதிவேடுகளில் இல்லை என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. 1969ஆம் ஆண்டு பிறப்பு மற்றும் இறப்புப் பதிவுச் சட்டத்தின் பிரிவு 17இன் கீழ், மானாமதுரை நகராட்சி ஆணையரால் இந்தச் சான்றிதழ் (ஆவண எண்: R.O.C. No: 000385/2025/பி1) அதிகாரப்பூர்வமாக வழங்கப்பட்டுள்ளது.




Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161